இன அழிப்பு யுத்தத்தில் தமது உறவுகளைத் தொலைத்துவிட்டு இன்றும் எதுவித பதிலும் இல்லாமல் உறவுகளைத் தேடுகின்ற எனது மக்களுக்காகவும் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்புக்கூடாக நடாத்தப்படுகின்ற இன அழிப்பு வேலைத்திட்டத்திற்கு எதிராகவும், தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்ற அரசியல் நியாயத்தை மாகாண சபையில் இருந்து சர்வதேச சபைகள் வரை குரல்கொடுப்பதற்காகவும் எனது மக்களின் மனச்சாட்சியின் குரலாக நான் இருக்கவேண்டும் என்பது ஒன்றே என்னை இயக்கிவருகிறது.

நான் அரசியலுக்குள் விரும்பி நுழையவில்லை. என் கண் முன்னால், எனது குழந்தைகளின் கண்முன்னால், எனது கணவரைக் கொண்டு சென்ற இராணுவம், அவரை எங்கே வைத்திருக்கிறது என்ற தேடலில் இறங்கி, என்னைப் போன்ற நிலையில் இருந்த மற்றவர்களுக்காகவும் குரல் கொடுத்தபோதுதான் இந்த அரசியல் தளத்தில் நின்று செயற்படவேண்டும் என்று என்னை என் மக்கள் வலியுறுத்தி அழைத்தார்கள்.

இந்த அடிப்படையில், எனது மனச்சாட்சிக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குமாக நேர்மையாக கடமை செய்யவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு.

விசாரணைக் கமிசன்களுக்கு முன்னால் எனது சாட்சியத்தை முன்வைத்த போது கூட சர்வதேச ஊடகங்கள், குறிப்பாக பி.பி.சி தமிழ், என்னைப் பேட்டி கண்ட போது சர்வதேச ரீதியாக எனது குரலும், என்னைப் போன்றவர்களின் குரலும், ஈழத் தமிழர்களின் குரலும் ஒலிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடும் மன உறுதியோடும் தான் நான் குரல் கொடுத்தேன்.

இதன் பின்னர் மாகாண சபையில் மக்களின் பலத்த ஆதரவுடன் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டேன். இதற்கு நேர்மையாகவே நான் செயற்படுகிறேன்.

நான் ஜெனிவா சென்று எமது மக்களின் குரலாக ஒலித்தபோது ஏற்படுத்தப்பட்ட தடைகளை இந்த மனநிலையோடு தான் நான் முறியடித்தேன்.

எனக்கும் சர்வதேசக் கதவுகளைத் தட்ட முடிந்தது. திறக்க முடிந்தது என்பதில் ஒரு மன ஆறுதல் இருக்கிறது. என்னைத் தெரிவு செய்த மக்களின் குரலாக நான் ஒலித்து வருகிறேன்.

இந்த மனச்சாட்சிக்கு விரோதமாக என்னால் செயற்பட முடியாது என்பதையே நான் மீண்டும் எனது கருத்தாக பதிவு செய்கிறேன். தொடர்ந்தும் செய்வேன்.

எமது மக்களின் இன அழிப்புக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்றும், இன அழிப்புப் போரை நடாத்திய சிங்கள அரசியல், இராணுவ தலைவர்கள் விசாரிக்கப்படவேண்டும் என்றும், தொடர்ந்தும் எமது அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுதலை, மீள் குடியேற்றம், தன்மானத்துடனும் சுதந்திரத்துடனும் நாங்கள் வாழக்கூடிய ஒரு அரசியல் சூழலை உருவாக்குவதற்கும் குரல் கொடுக்கவேண்டியது எனது கடமை. இதையே நான் செய்துவருகிறேன்.

நான் முன்வைக்கும் கருத்துக்கள் சிலபேருக்குத் தடங்கலாக இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள் என்பதற்காக மட்டும் எனது மனச்சாட்சிக்கும், எனது மக்களின் மனச்சாட்சிக்கும் முரணான போக்கை நானும் கடைப்பிடிக்கவேண்டும் என்று என்மீது பல சந்தர்ப்பங்களில் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது.

மாகாணசபையில் அமோக வாக்குகளோடு தெரிவாகியும் கூட அங்கே பாரபட்சம் காட்டப்பட்டபோது பொறுமையாக இருந்து எனது நிலைப்பாட்டை சரணாகதி செய்யாமல் செயற்பட்டு வருகிறேன்.

அதன்பின் சர்வதேச ரீதியான ஜெனீவா மனித உரிமை அமர்வில் கலந்துகொண்டு எமது மக்களின் கருத்தை முன்வைத்தேன். இதற்கு எதிராக ஒரு சிலரால் முட்டுக்கட்டை போட்டபோது தான் எனக்கு சர்வதேச அரசியலில் கூடிய தெளிவு ஏற்பட்டது.

துணிவாக எமது கருத்தை முன்வைக்கின்ற எமது ஜனநாயக உரிமையை பயன்படுத்த சர்வதேசத்தில் எவரும் தடையாக இல்லை. ஆனால், ஒரு சிலர், சர்வதேச நாடுகளின் நலனுக்கு தாங்களாகவே எமது உரிமைகளை விட்டுக்கொடுத்துத்தான் ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்தில் செயற்படுகிறார்கள்.

அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள் என்றால் அதற்கு நான் என்ன செய்யமுடியும். என்னைத் தேர்ந்தெடுத்தவர்களும், ஊடகங்களும் கேள்வி எழுப்பும் போது நான் உண்மையைத்தான் சொல்வேன். சொல்லவேண்டும்.

ராஜபக்சாவுக்கு எதிராக சர்வதேச மன்றுகள் வரை சென்றுவந்தவள் நான். எந்தக் கேள்விகளுடன் சர்வதேச விசாரணையைக் கோருகின்றோமோ, அந்தக் கேள்விகள் எல்லாவற்றையும் மறுதலிக்கும் இன்னும் ஒரு ராஜபக்சாவுக்கு பின்னால் எமது கோரிக்கைக்கு எந்த அங்கீகாரத்தையும் தரமுடியாத நிலையில் நாம் எவ்வாறு ஒரு பகிரங்கமான ஆதரவை வழங்கமுடியும் என்று மக்கள் கேட்கிறார்கள்.

இதற்கான பதிலையே நான் சொன்னேன். இதற்காக என்னை மிரட்டி அடிபணிய வைக்கும் உத்தியை சிலர் பயன்படுத்துகிறார்கள்.

இவர்கள் பகிரங்கமாக எனது மக்கள் முன் வரட்டும். நான் எனது மக்கள் முன் எனது கருத்தை வைக்கத் தயாராக இருக்கிறேன்.

மக்களின் கருத்தைப் பிரதிபலிக்காத ராஜதந்திரம் போலித் தந்திரம். இந்தத் போலித் தந்திரத்தை அரசியலாக்கினால், நாம் செய்வது போக்கிலி அரசியலாகிவிடும். போக்கிலிகளாக எம்மை நாமே மாற்றினால், விடுதலைக்கான தகுதியை நாங்களே இழந்துவிடுவோம். இந்தப் பாடத்தைக்கூட எமது கடந்தகால தியாகப் பயணத்தில் இருந்து படிக்கிவில்லை என்றால் அது ராஜ தந்திரமல்ல, அது அடிமைத் தந்திரம்.

அன்புடன்.

அனந்தி சசிதரன்

வடமாகாணசபை உறுப்பினர்